# கலைஞரும் நானும் 29

"தளராத மனம், தீவிரமான உழைப்பு, பக்கபலமான அணிகள் ஆகியவை ஒரு தலைவனை உருவாக்குகின்றன. நம் காலத்தில் தலைவனின் அடையாளமாக இருந்தவர் கலைஞர்" என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் நடிகர் ராஜேஷ்.

■ நடிகர் ராஜேஷ்

# "பாசப் பயணம் தொடருதா?"



"1960-ஆம் ஆண்டில், எனது பதினோரு வயதில் 'மனோகரா' திரைப்படத்தைப் பார்க்கிறேன். வசனம் என கலைஞர் பெயர் வரும் நேரத்தில் தியேட்டரில், கைதட்டல், விசில் பறக்கிறது. கலைஞர் யார் என நான் கேட்டு அறிந்துகொண்ட அந்த நாள் இப்போதும் ஞாபகத்தில் உள்ளது. அதன்பின்னர், அவருடைய படங்கள் மூலம் மிகவும் நெருக்கமாக அறிமுகமானார்.

1961-ஆம் ஆண்டு சின்னமனூரில் படித்துக் கொண்டிருந்தபோது, அங்கு மலைச்சாமி என்கிற கழகத் தோழரைப் பார்ப்பதற்காக, கலைஞரும் எஸ்.எஸ்.ஆரும் வந்திருந்தனர். அவர்கள் வந்த பிளைமவுத் காரின் பின்னே ஓடி, மலைச்சாமி வீட்டு ஜன்னல் வழியாக கலைஞரைப் பார்த்தேன். எனது மாமா **பட்டுக்கோட்டை டேவிஸ்,** திராவிடர் கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர். தஞ்சைப் பகுதியில் **'பகுத்தறிவுச் சிங்கம்'** எனப் பெயரெடுத்தவர். அவர் பெயரைச் சொல்லி அறிமுகம் ஆகிக்கொள்ளலாம் என யோசித்தேன். ஆனால், அப்போது தைரியம் இல்லை.

## கொள்கையே உறவு

அதன்பின்னர் படித்துவிட்டு, 1971- ஆம் ஆண்டு சென்னைக்கு வேலைக்கு வந்து, சிந்தாதிரிப்பேட்டையில் எனது சித்தி வீட்டில் இருந்தேன். அப்போது தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த நாவலர், மாறன் ஆகியோரிடம் எனது சித்தி, பட்டுக்கோட்டை டேவிஸ் அவர்களின் அக்கா மகன் என அறிமுகம் செய்துவைத்தார். குடும்பத்தை விசாரித்ததுடன், 'ஆட்சிக்கு வந்ததும் பார்ப்போம்' எனச் சொல்லிச் சென்றனர்.

அதை ஞாபகம் வைத்திருந்த எங்க சித்தி, மாமாவிடம் கடிதம் வாங்கி வந்தால், அரசுக் குடியிருப்பில் குறைந்த வாடகையில் வீடு கிடைக்கும் என்றார். தேர்தலில் வெற்றிபெற்று கலைஞர் ஆட்சியில் அமர்ந்த நேரம் அவரைச் சந்தித்தோம். கையில் மாமாவிடம் இருந்து வாங்கிய கடிதம் இருந்தது. அடுத்த பதினைந்து நாட்களில் வீடு ஒதுக்கீடு செய்த உத்தரவு கிடைத்தது. அதை என்னால் மறக்கவே முடியாது.

தனியார் பள்ளி ஆசிரியர்களின் வேலை பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார் கலைஞர். அதற்கு தனியார் பள்ளி ஆசிரியர்களுடன் சென்று நன்றி தெரிவித்தேன். அப்போது தனியாக என்னுடன் பேசியதுடன், மாமா குறித்து நலம் விசாரித்தார்.

அதன்பின்னர், கலைஞரை விட்டு எம்.ஜி.ஆர் விலகியதும், எனக்கு மிகப்பெரிய வருத்தம் ஏற்பட்டது. எனினும், பல மேடைகளில் அவரது உரையைக் கேட்டாலும், நடிகரான பின்னர், 1983-ஆம் ஆண்டில் நடந்த எனது திருமணத்துக்கு வந்து வாழ்த்திச் சென்றார்.

எனக்கு ஆரம்பத்தில் திக்குவாய் பிரச்சினை இருந்தது. அதைச் சரிசெய்வதற்கு கலைஞரின் வசனங்கள்தான் உதவின. சிவாஜி கணேசன் பேசுவதுபோல, நாவலர் பேசுவது போல அவரது வசனங்களைப் பேசிப் பயிற்சி எடுத்தேன்.

## எளிதாகும் சந்திப்புகள்

கலைஞரைச் சந்திப்பதற்கான நடைமுறைகள் கடினமே இல்லை. ரொம்ப எளிதாக முடிந்துவிடும். அவருக்கு போன் செய்யும் மூன்றாவது தடவையிலேயே சந்திப்புக்கான நேரம் உறுதியாகிவிடும். அல்லது எப்போது சந்திக்கலாம் என்பதை உறுதி செய்து விடுவார்கள். அவ்வளவு சிறப்பாகத் தனது நேரத்தையும், பிறரது நேரத்தையும் மதிப்பவர் கலைஞர். 'உங்களால் மட்டும் எப்படி முடிகிறது?' என அவரிடமே நேரடியாகக் கேட்பேன்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், நான் தொடங்கிய தொழிலின் நிமித்தம் கொடுத்த விளம்பரத்தில் ஜெயலலிதா அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்திருந்தேன். அதற்குப்பின் சில நாட்களில், கலைஞர் கலந்து கொண்ட ஒரு திருமண மேடையில் நானும் கலந்து கொண்டு பேசுகையில், எனக்குக் குறைந்த வாடகைக்கு அரசு வீடு வழங்கியவர் கலைஞர் என நினைவூட்டினேன்.

இறுதியாக வாழ்த்துரை வழங்கிய கலைஞர், "தம்பி ராஜேஷ் போன்றவர்கள் நன்றியுடன் இருப்பதால்தான், நான் தமிழ்நாட்டுக்கு மேலும் செய்ய ஆசைப்படுகிறேன்" என உணர்ச்சிபொங்கக் குறிப்பிட்டார். நிகழ்ச்சி முடிந்து காரில் ஏறப்போகும் முன், 'விளம்பரம் பார்த்தேன், ரசித்தேன், சிரித்தேன், பாசப் பயணம் தொடருதோ என நினைத்தேன்' என்றார். எம்.ஜி.ஆர் அவர்களுடன் எனது நெருக்கத்தைக் குறிப்பிட்டு அப்படிக் கூறி உரையாடினார்.

> **எனக்கு ஆரம்பத்தில் திக்குவாய் பிரச்சினை இருந்தது. அதைச் சரிசெய்வதற்கு கலைஞரின் வசனங்கள்தான் உதவின.**

## பெரியார் அண்ணா எங்கே?

தினமணியில் 'முரண்சுவை' என முக்கியத் தலைவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைத் தொடராக எழுதி வந்தேன். அந்த நூல் வந்ததும், கலைஞரைச் சந்தித்து அளித்தேன். அதைப் பார்த்தவர், அந்தத்தொடரில் பெரியார், அண்ணாவை ஏன் எழுதவில்லை எனக் கோபத்துடன் கேட்டார். ஆனால், அவர்களை எழுதினால், நம்மவர்கள் மீதே விமர்சனம் எழும் என்பதால் நான் எழுதவில்லை என நினைத்துத்தான் விட்டேன். அதை அவர் கேட்பார் எனத் தெரியும்.

அவர் முதலமைச்சராக இருந்தபோது, இரண்டு முறை ஒரு லட்சம் வீதம் அரசுக்கு நன்கொடை அளித்தேன். பார்க்க நினைத்தால், உடனே கலைஞரைச் சந்தித்து விடுவது என்பது என் வழக்கம்.

அவர் இறந்துவிட்டார் என அடிக்கடி புரளி வரும். அப்படி ஒருமுறை புரளி வந்த போது நான் பதறி அடித்துக் கொண்டு கோபாலபுரம் வீட்டுக்கு போன் செய்தேன். வரச்சொன்னார். "நான் கலக்கத்துடன் அண்ணே, இதெல்லாம் யோசிக்காதீங்க" என்றேன். 'இதெல்லாம் புதுசா?' என்றவர், 'உங்கள மட்டும்தான் வரச் சொன்னேன்' எனப் பாசம் காட்டினார்.

அவரது நினைவாற்றலுக்கு முன் யாராலும் வெற்றிபெற முடியாது. அதை அவரிடமே நான் கேட்டிருக்கிறேன். சிவாஜி கணேசன் அவர்களோடும் எனக்கு நெருக்கம். கலைஞருடன் பேசிக் கொண்டிருந்த ஒரு நாளில், சிவாஜி சாரை முதன்முதலில், 'எப்போ பார்த்தீங்க?' எனக் கேட்டேன். உடனே தயங்காமல், '1949-இல் தஞ்சாவூர்ல ஜூபிடர் தியேட்டர் பக்கத்தில ஒரு வெத்தல பாக்குக் கடை பக்கம் பார்த்தேன்யா' என்றார். அப்படியொரு நினைவாற்றல், 'எப்படிண்ணே உங்க மூளையை மட்டும்கம்ப்யூட்டர் மாதிரி அவ்வளவு துல்லியமா வெச்சிருக்கீங்க?' எனக் கேட்பேன். ஏன் 'அல்சைமஸ் வரும்னு நெனச்சியா, எனக்கு வராது" என்றார்.

## எதிர்த்தாலும் கொள்கை

கலைஞரின் தளராத மனம், உழைப்பு எல்லாம் எப்போதும் ஆச்சர்யம் அளிப்பவை. கொள்கை மாறாமல் கடைசிக் காலம் வரை இருப்பது என்பதை கலைஞரிடம் இருந்தே கற்றுக் கொள்ள வேண்டும்.

1967-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது, தி.மு.க.வை ஒழித்துக் கட்ட வேண்டும் என மூன்று மாதங்கள் வரை வீட்டுக்கே வராமல் எதிர்ப்பிரசாரம் செய்தவர் எனது மாமா. அப்படிப்பட்டவருக்கு அறிவாலயத்தின் கருவூலத்தில் படம் மாட்டினார் கலைஞர். அவரது ஒரு கடிதத்துக்காக எனக்கு அரசுக் குடியிருப்பில் வீடு ஒதுக்கியவர் கலைஞர். ஏனென்றால், அவருக்குக் கொள்கைதான் முக்கியம்.

எத்தனை எதிர்ப்புகள், இடர்கள் வந்தாலும் கொண்ட கொள்கை, அதற்கான உழைப்பு என அவரைப்போல லட்சிய வேட்கை கொண்டவரை இனி பார்க்க முடியாது.

...பகிர்வார்கள்

## பன்முகத் திறமைக்குப் பாலம்!



தமிழ்நாட்டின் வாசிப்பு இயக்கத்துக்கு அரசின் முயற்சிகளுடன், அறிவுத் துறை ஆளுமைகளின் பங்களிப்பும் வளம் சேர்க்கின்றன என்பதுதான் நமது பலமாக உள்ளது. அந்த வகையில், மாணவர்களிடம் வாசிப்பு, எழுத்து, இலக்கிய ஆர்வத்தை வளர்த்து வருகிறார் ஆசிரியர் ம.இளவரசு.

கோவை, கிணத்துக்கடவு அருகே உள்ள அரசம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றும் இவர், பள்ளி மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவித்து, 'நாற்றங்கால்' என்கிற கையெழுத்து இதழைக் கொண்டு வந்துள்ளார். கட்டுரை, கதை, ஓவியம், கள நேர்காணல் என மாணவர்களின் பங்களிப்புடன், மாணவர்களின் கையெழுத்திலேயே அந்த இதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. வாசித்த நூல்கள் குறித்து, அந்த நூலின் ஆசிரியர்களுக்குக் கடிதம் எழுதவும் ஊக்குவிக்கிறார். இதன் மூலம் மாணவர்கள் வகுப்பறையைத் தாண்டியும் கற்பதற்கு ஆர்வம் பெறுகின்றனர். மாணவர்கள், பள்ளியிலேயே பன்முகத் திறமை கொண்டவர்களாக வளர்ந்து வருவது ஆரோக்கியச் சமூகத்தின் அடையாளம். அதை உருவாக்கும் ஆசிரியர் இளவரசு பாராட்டுக்குரியவர்.

## :.ப்ளாஷ்பேக்



## ஆய்வுக்குழுக் கூட்டம்!



சரவணன்

இளைஞர் அணி ஆய்வுக் குழுக் கூட்டம் இன்றைய முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணிச் செயலாளருமான தளபதி அவர்கள் தலைமையில், 1993- ஆம் ஆண்டு மணப்பாறையில் நடைபெற்றது. கழகத்தின் வளர்ச்சிக்கு இளைஞர் அணியின் பங்களிப்பாக, தெருமுனைக் கூட்டங்கள், சைக்கிள் பிரச்சாரம்,கொடியேற்றும் நிகழ்வுகள் போன்ற திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டது. அப்போது எடுத்த இந்தப் படத்தில் அன்பில் பொய்யாமொழி, மு.மலையாளம் போன்ற கழக முன்னோடிகளும் இடம்பெற்றுள்ளனர்.

**-ஏ.பி.சரவணன்**
**நகர முன்னாள் துணைச் செயலாளர்**
**மணப்பாறை, திருச்சி.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### செய்யவேண்டிய பணிகள்!

**1963 - ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் தேனி நகரில், பேரறிஞர் அண்ணா கலந்து கொண்ட கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பாண்டி மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு நெல்லையில் நடந்து முடிந்த மறுநாள் இந்தக் கூட்டம் நடந்தது. அங்கு, நெல்லைப் போராட்டக்குழுத் தலைவராகச் செயல்பட்ட கலைஞருக்கு வெள்ளி வீரவாளையும், கேடயத்தையும் பரிசளித்த அண்ணா. அந்த வெள்ளி வாளும், கேடயமும் இதுவரை நான் செய்து முடித்த பணிகளுக்காக அல்ல, நான் செய்ய வேண்டிய பணிகளுக்கான அச்சாரமாகக் கொடுத்தது என முழங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 194




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131